



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ஜுமாதியுல் அவ்வல் பிறை 2 ஹிஜ்ரி 1437
Friday of Jumada Al Thaany 2nd Hijri 1437
11th March 2016

| | |
|---|---|
| தலைப்பு: | அமைதியான உள்ளத்தோடு இறைவனிடம் வருபவரே பயனடைவார்! |


| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |


*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | அமைதியான உள்ளத்தோடு இறைவனிடம் வருபவரே பயனடைவார்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! இறைநம்பிக்கை எனும் ஒளியினால் உள்ளங்களை மிகவும் பிரகாசமாக வைத்திருக்கிறான். திக்ர் செய்வதின் மூலமாகவும், திருமறைக் குர்ஆனை ஓதுவதின் மூலமாகவும் அந்த உள்ளங்களை உயிர்ப்புடன் இறைவன் வைத்திருக்கிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(22:32)

ذَٰلِكَ وَمَنْ يُعَظِّمْ شَعَائِرَ اللَّهِ فَإِنَّهَا مِنْ تَقْوَى الْقُلُوبِ

“இதுவே (அவனுடைய கதியாகும்.) எவர் அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட அடையாளங்களை கண்ணியப்படுத்துகின்றாரோ அது அவருடைய உள்ளத்தின் இறை அச்சத்தை அறிவிக்கிறது”

**தொழுகையாளிகளே**! உள்ளத்தை தூய்மையாக வைத்திருப்பது மிகப்பெரிய பணியாகும். அதனால் கிடைக்கும் பலன் மிகவும் அதிகமானதாகும். அனைத்து உடல் உறுப்பிற்கும் உள்ளம்தான் அரசனாக திகழ்கிறது. உள்ளத்தின் கட்டளை நல்லதாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும் மற்ற உறுப்புகள் அனைத்தும் அப்படியே கேட்டு நடக்கின்றன. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ فِي الْجَسَدِ مُضْغَةً إِذَا صَلَحَتْ صَلَحَ الْجَسَدُ كُلُّهُ، وَإِذَا فَسَدَتْ فَسَدَ الْجَسَدُ كُلُّهُ، أَلاَ وَهِيَ الْقَلْبُ

“எச்சரிக்கை! உடலில் ஒரு சதைத் துண்டு இருக்கிறது. அது சீர் பெற்று விட்டால் உடல் முழுவதும் சீர் பெற்று விடும். அது சீர் குலைந்துவிட்டால் முழு உடலும் சீர்குலைந்து விடும். புரிந்து கொள்ளுங்கள். அதுதான் இதயம்!' (متفق عليه )

உள்ளம் தூய்மையாக இருந்தால் எண்ணமும் செயலும் நல்லவிதமாக அமையும். நாவில் இருந்து வெளிப்படும் வார்த்தைகளும், உடல் உறுப்புகளில் இருந்து வெளியாகும் செயல்பாடுகளும் மிக அழகானதாக அமைந்திருக்கும். ஆழமான மதிநுட்பம் நிறைந்த நமது மார்க்கம் உளவியல் ரீதியாக அதிக கவனம் செலுத்துகிறது. மனதில் உள்ள எண்ண ஓட்டங்களையும், அதன் சிந்தனைகளையும் தூய்மைப்படுத்துகிறது. மறைவானவற்றை அறியும் இறைவன் மனதின் ஆழமான பகுதியையும் உற்று நோக்குகிறான். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ اللَّهَ لاَ يَنْظُرُ إِلَى صُوَرِكُمْ وَأَمْوَالِكُمْ، وَلَكِنْ يَنْظُرُ إِلَى قُلُوبِكُمْ وَأَعْمَالِكُمْ

"நிச்சயமாக அல்லாஹ் உங்கள் தோற்றங்களையோ செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக, உங்கள் உள்ளங்களையும் உங்களுடைய செயல்பாடுகளையும் பார்க்கின்றான்" (2564 : مسلم )

இறைநம்பிக்கை மற்றும் இறையச்சத்தின் இருப்பிடம் உள்ளமாகும். எனவேதான் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் விரல்களால் தமது நெஞ்சை நோக்கி மூன்று முறை சைகை செய்து, “இறையச்சம் இங்கே இருக்க வேண்டும்” என்று கூறினார்கள். (2564 : مسلم )

நிம்மதியாக இருக்கும் உள்ளம் இறைநம்பிக்கையின் சுவையை உணர்ந்துகொள்ளும். உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தும். நன்மையான மற்றும் சிறப்பான செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்கிற ஆர்வம் அதிகப்படும்.

**அல்லாஹ்வின் அடியார்களே**! உள்ளம் அமைதியாக இருந்தால் இவ்வுலகிலும் மறு உலகிலும் வெற்றி பெறுவதற்கான வழிகள் சுலபமாகிவிடும். சொர்க்கத்திற்குள் நுழைவதற்கும் மிகப்பெரிய காரணியாக அமையும். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (26:88-89)

يَوْمَ لاَ يَنْفَعُ مَالٌ وَلاَ بَنُونَ* إِلاَّ مَنْ أَتَى اللَّهَ بِقَلْبٍ سَلِيمٍ

“அந்நாளில், பொருளும் மக்களும் யாதொரு பயனுமளிக்காது. ஆயினும், பரிசுத்த உள்ளத்துடன் (தன் இறைவனாகிய) அல்லாஹ்விடம் வருபவர்தான் (பயனடைவார்)”

பரிசுத்த உள்ளத்துடன் (தன் இறைவனாகிய) அல்லாஹ்விடம் வருபவர்தான் (பயனடைவார்). அமைதியான உள்ளத்துடன் தன் இறைவனிடம் வருபவரே பயனடைவார்.

இவ்வுல வாழ்வில் அமைதியான மன நிலையில் இருப்பவர்கள் நிச்சயம் பாக்கியம் பெற்றவர்கள்.

فَعَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: قِيلَ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه و سلم: أَيُّ النَّاسِ أَفْضَلُ؟ قَالَ: كُلُّ مَخْمُومِ الْقَلْبِ، صَدُوقِ اللِّسَانِ». قَالُوا: صَدُوقُ اللِّسَانِ نَعْرِفُهُ، فَمَا مَخْمُومُ الْقَلْبِ؟ قَالَ: هُوَ التَّقِيُّ النَّقِيُّ، لاَ إِثْمَ فِيهِ وَلاَ بَغْيَ، وَلاَ غِلَّ وَلاَ حَسَدَ

“அல்லாஹ்வின் தூதரே! மனிதர்களில் மிகவும் சிறந்தவர்கள் யார்?” என்று ஒரு முறை இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், “உள்ளம் தூய்மையாக இருப்பவர்களும், உண்மையாக பேசுபவர்களும்தான்” என்று பதில் கூறினார்கள். அப்போது அங்கிருந்தவர்கள், “உண்மையாக பேசுபவர்கள் என்றால் என்னவென்று எங்களுக்கு தெரியும். உள்ளம் தூய்மையடைந்தவர்கள் என்றால் யார்?” என்று கேட்டார்கள். அதற்கு கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “நிம்மதியான தூய்மையான பதற்றமில்லாத உள்ளம், மேலும் எந்தவித பாவச்செயலும், பழிச்செயலும், (யார் மீதும்) வெறுப்பும் பொறாமையும் அந்த உள்ளத்தில் இருக்காது. (இதுதான் தூய்மையடைந்த உள்ளமாகும்)” என்று விளக்கமளித்தார்கள். (4216 : ابن ماجه)

உள்ளம் அமைதி நிலையை பெறுவதற்கு, யார் மீதும் பொறாமை கொள்ளக்கூடாது, பகை உணர்வையும், பழிவாங்கும் எண்ணத்தையும் அறவே விட்டொழிக்க வேண்டும். யாரையும் ஏமாற்ற நினைக்க வேண்டாம், மற்றவர்களுக்கு காட்டுவதற்காக நற்செயல்கள் செய்யக்கூடாது, தற்பெருமை, நம்பிக்கை துரோகம், தான் மட்டும் முன்னேறினால் போதும் என்கிற சுயநல போக்கு, நமக்கெதற்கு வம்பு என்று ஒதுங்கும் குறுகிய மனநிலை போன்ற அனைத்தையும் ஒழித்துவிட வேண்டும்.

ஒரு சஹாபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: எனது நற்செயல்களில் இரண்டு நற்செயலைத்தான் மிகவும் உறுதி வாய்ந்ததாக கருதுகிறேன். ஒன்று, எனக்கு தொடர்பில்லாதவற்றை நான் பேசுவது கிடையாது. இரண்டாவது, முஸ்லிம்கள் குறித்து நான் நல்லவிதமாகவே எண்ணம் கொண்டிருக்கிறேன்” (285/1 والجامع لابن وهب ، (557/3): الطبقات الكبرى لابن سعد)

**தொழுகையாளிகளே!** உள்ளத்தை உயிர்ப்போடும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதற்கு ஏராளமான வழிகள் உள்ளன. அவற்றில் மிகவும் சிறந்தது இறைவனுடைய வேதத்தை அனுதினமும் ஓதிவருவதாகும், அவற்றில் கூறப்படும் கருத்துக்களை விளங்க முற்பட வேண்டும், ஒவ்வொரு வசனத்தைப் பற்றி அதிகப்படியான விளக்கத்தை புரிந்துகொள்ள



www.sunnathwaljamath.com

முயற்சிக்க வேண்டும். திருமறையை வழக்கமாக ஓதி வருவதால் பரிபூரண ஆரோக்கியமும், நேரான வழியும் கிடைக்கும். ஒளிமயமான வாழ்வும் அமையும். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (10:57)

يَا أَيُّهَا النَّاسُ قَدْ جَاءَتْكُمْ مَوْعِظَةٌ مِنْ رَبِّكُمْ وَشِفَاءٌ لِمَا فِي الصُّدُورِ وَهُدًى وَرَحْمَةٌ لِلْمُؤْمِنِينَ

“மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. உங்கள் உள்ளங்களிலுள்ள நோய்களை குணப்படுத்தக் கூடியதுமாகும். (அது) நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு நேர்வழி காட்டியாகவும், ஓர் அருளாகவும் இருக்கிறது”

மனதிற்கு தேவையான உளவியல் ஆலோசனை தருவதில் மிகச் சிறந்த வேதமாக சங்கை நிறைந்த திருக்குர்ஆன் திகழ்கிறது. திடமான மன வலிமையையும், தெளிவான சிந்தனை தரவுகளையும் இந்த வேதத்தின் மூலம் பெறலாம். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (47:24)

أَفَلاَ يَتَدَبَّرُونَ الْقُرْآنَ أَمْ عَلَى قُلُوبٍ أَقْفَالُهَا

“அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது, இவர்களுடைய உள்ளங்கள் மீது தாளிடப்பட்டு விட்டதா?”

மேலும் பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (8:2)

إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ إِذَا ذُكِرَ اللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ

“உண்மையான நம்பிக்கையாளர்கள் யாரென்றால், அல்லாஹ்வை (அவர்கள் முன்) நினைவு கூறப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் பயந்து நடுங்கிவிடும்; அல்லாஹ்வுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவர்களுடைய நம்பிக்கை (மென்மேலும்) அதிகரிக்கும். அவர்கள் தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பார்கள்”

இறைவனை திக்ர் செய்வதின் மூலம் உள்ளத்தில் ஈமான் உறுதிப்படுகிறது. அமைதியான மற்றும் நிம்மதியான மனநிலை வளர்கிறது. எல்லாம் வல்ல ஏக இறைவன் திருமறையில் கூறுகிறான்: (13:28)

الَّذِينَ آمَنُوا وَتَطْمَئِنُّ قُلُوبُهُمْ بِذِكْرِ اللَّهِ أَلاَ بِذِكْرِ اللَّهِ تَطْمَئِنُّ الْقُلُوبُ

“மெய்யாகவே நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் அவர்கள்தாம்; (அவர்கள் முன்) அல்லாஹ்வின் திருப்பெயர் துதி செய்யப்பட்டால், அவர்களுடைய உள்ளங்கள் நிம்மதியடைந்து விடுகின்றன. (ஏனென்றால்,) அல்லாஹ்வின் திருப்பெயரை துதி செய்வதனால் (உண்மை நம்பிக்கையாளர்களின்) உள்ளங்கள் நிச்சயமாகத் நிம்மதி அடையும் என்பதை (நபியே! நீங்கள்) அறிந்துகொள்ளுங்கள்”

இறைவனை திக்ர் செய்யும்போது உள்ளம் எப்போதும் உயிர்ப்போடு இருக்கும். உள்ளத்தை விட்டு ஏனைய பாவங்களை அப்புறப்படுத்தி விடும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَثَلُ الَّذِي يَذْكُرُ رَبَّهُ وَالَّذِي لاَ يَذْكُرُ مَثَلُ الْحَيِّ وَالْمَيِّتِ

“தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றுகிறவரின் நிலை உயிருள்ளவரின் நிலைக்கும், தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றாதவரின் நிலை உயிரற்றவரின் நிலைக்கு ஒத்திருக்கிறது” (البخاري : 6407)

ஒருவன் தனது உள்ளத்தை ஒருமுகப்படுத்தி பரிசுத்த நாயனாகிய அல்லாஹ்வின் நினைவிலேயே திளைத்து, அவனை நோக்கியே பணிவாக வாழ்ந்தால் நிச்சயம் அவனுடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

ادْعُوا اللَّهَ وَأَنْتُمْ مُوقِنُونَ بِالإِجَابَةِ، وَاعْلَمُوا أَنَّ اللَّهَ لاَ يَسْتَجِيبُ دُعَاءً مِنْ قَلْبٍ غَافِلٍ لاَهٍ

“(கேட்கப்படும் துஆ) நிச்சயம் ஏற்றுக்கொள்ளப்படும் என்கிற (மன) உறுதியில் நீங்கள் அல்லாஹ்விடம் துஆக் கேளுங்கள். அலட்சியமாகவோ அல்லது விளையாட்டுத் தனமாகவோ கேட்கப்படும் துஆக்களை நிச்சயமாக அல்லாஹ் ஏற்பதில்லை என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளுங்கள்” (الترمذي : 3479)

உள்ளம் ஒரே நேர்கோட்டில் சிந்திக்க வேண்டும், ஒரு முகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். எனவே உள்ளம் ஒரே அச்சில் சீராக சுழல்வதற்கு இறைவனிடம் மன்றாடி துஆச் செய்ய வேண்டும். கடிவாளம் இல்லாத இதயம் எப்போதும் இடமாறிக் கொண்டே இருக்கும். அதனால்தான் அடிக்கடி இடம் பெயர்வதால் இதயத்திற்கு அரபியில் “கல்பு” என்றழைக்கப்படுகிறது. கல்பு என்கிற வார்த்தையின் வேர்ச்சொல் “தகல்லுப்” (இடம் பெயர்தல்) என்பதாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

لَقَلْبُ ابْنِ آدَمَ أَسْرَعُ تَقَلُّبًا مِنَ الْقِدْرِ إِذَا اسْتَجْمَعَتْ غَلَيَانًا

“ஒரு சட்டியில் கொதித்துக்கொண்டிருக்கும் நீரை விட மிக வேகமாக ஆதமுடைய மகனின் இதயம் இடம் மாறிக்கொண்டே இருக்கும்” (أحمد 24545، وابن أبي عاصم في السنة : 226 واللفظ له)

இதனால்தான் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வரும் துஆவை அதிகமாக செய்து வந்துள்ளார்கள்:

يَا مُقَلِّبَ الْقُلُوبِ ثَبِّتْ قَلْبِي عَلَى دِينِكَ

“உள்ளங்களை திருப்புகிறவனே நீ எனது உள்ளத்தை உன்னுடைய மார்க்கத்தின் மீது நிலைப்படுத்தி வைப்பாயாக” (2140 : الترمذي)

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு முறை அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், “அல்லாஹ்வின் தூதரே!! உங்களை (நபி என்று) நம்பிக்கை கொண்டுவிட்டோம், நீங்கள் கொண்டு வந்த(வேதத்)தையும் நம்பிக்கை கொண்டுவிட்டோம். (இதற்கு மேலும்) எங்களைக் குறிந்து நீங்கள் பயப்படுகிறீர்களா?” என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:

نَعَمْ، إِنَّ الْقُلُوبَ بَيْنَ أُصْبُعَيْنِ مِنْ أَصَابِعِ اللَّهِ يُقَلِّبُهَا كَيْفَ يَشَاءُ

“ஆம்! உள்ளங்கள் (அனைத்தும்) அல்லாஹ்வின் விரல்களுக்கிடையில் உள்ளன. எனவே அவன் தான் நாடியவாறு அவற்றை திருப்பிக் கொண்டே இருப்பான்” என்று சொன்னார்கள். ( وابن ماجه: 3834)

**முஸ்லிம்களே**! நல்லோர்களுடன் சேர்ந்து இருப்பதும், இறைநேசர்களின் தொடர்பில் இருப்பதும் உள்ளம் அமைதி நிலையை அடைவதற்கான முக்கிய காரணிகளாகும். உள்ளத்தை உருக வைக்கும் அறிவுரைகளை அவர்கள் தருவார்கள். பூவோடு சேர்ந்து நாறும் மணக்கும் என்கிற அடிப்படையில் அவர்களோடு சேர்ந்து வாழும்போது அவர்களின் நல்ல தன்மைகளை ஒருவன் பெற முடியும். அந்த நல்லடியார்கள் பேசும் வார்த்தைகள் நமது உள்ளங்களில் குளுமையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தும். மன அமைதியை பெற்றுத்தரும். உள்ளம் தூய்மையடைந்து இறைநம்பிக்கை அதிகரிக்கும்.

நல்லடியார்களோடு சேர்ந்து வாழ வேண்டும் என்கிற பண்பை இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவன் தனது திருமறை மூலம் போதிக்கிறான்: (18:28)

وَاصْبِرْ نَفْسَكَ مَعَ الَّذِينَ يَدْعُونَ رَبَّهُمْ بِالْغَدَاةِ وَالْعَشِيِّ يُرِيدُونَ وَجْهَهُ وَلاَ تَعْدُ عَيْنَاكَ عَنْهُمْ تُرِيدُ زِينَةَ الْحَيَاةِ الدُّنْيَا وَلاَ تُطِعْ مَنْ أَغْفَلْنَا قَلْبَهُ عَنْ ذِكْرِنَا وَاتَّبَعَ هَوَاهُ وَكَانَ أَمْرُهُ فُرُطًا

“(நபியே!) எவர்கள் கஷ்டங்களைச் சகித்துத் தங்கள் இறைவனின் திருமுகத்தையே நாடி அவனையே காலையிலும், மாலையிலும் (பிரார்த்தனை செய்து) அழைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுடன் உங்களையும் நீங்கள் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வுலக அலங்காரத்தை நீங்கள் விரும்பி அத்தகைய (நல்ல)வர்களை விட்டு உங்கள் கண்களைத் திருப்பி விடாதீர்கள். அன்றி, தன் சரீர இச்சையைப் பின்பற்றியதன் காரணமாக எவனுடைய உள்ளத்தை நம்மைத் தியானிப்பதிலிருந்து நாம் திருப்பி விட்டோமோ அவனுக்கும் நீங்கள் கட்டுப்படாதீர்கள். அவனுடைய காரியம் எல்லை கடந்துவிட்டது”

ஒவ்வொரு நொடிப்பொழுதும் இறைவனுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்கிற உயரிய மனநிலையை இறைநேசர்கள் கற்றுக் கொடுப்பார்கள். மனிதர்களிடம் நல்லவிதமாக பழகுவது, அழகிய நற்குணத்தோடு திகழ்வது, மனிதர்களுக்கு நல்லது மட்டுமே செய்வது, புறம் பேசுவதை தவிர்ப்பது, முடிந்த வரை தீமைகளை தடுப்பது உள்ளிட்ட அனைத்து வாழ்வியல் நற்பண்புகளையும் அவர்கள் நமக்கு கற்றுக் கொடுப்பார்கள். இதனால் உள்ளம் தூய்மையடைந்து மிகவும் ஆரோக்கியமாக இருக்கும்.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ يَسْتَقِيمُ إِيمَانُ عَبْدٍ حَتَّى يَسْتَقِيمَ قَلْبُهُ، وَلاَ يَسْتَقِيمُ قَلْبُهُ حَتَّى يَسْتَقِيمَ لِسَانُهُ

“ஓர் அடியானின் உள்ளம் ஒருநிலைப்படாதவரை அவனுடைய இறைநம்பிக்கை ஒருநிலைப்படாது. அவனுடைய நாவு ஒருநிலைப்படாதவரை அவனுடைய உள்ளம் ஒருநிலைப்படாது” (13389 : أحمد)

எனவே நாம் பேசும் வார்த்தைகள் ஒரு நிலையில் சீராக இருந்தால், நமது உள்ளமும் ஒரு நிலையில் சீராக இருக்கும். அதன் மூலம் நமது இறைநம்பிக்கையும் ஒரு நிலையில் சீராக இருக்கும்.

யா அல்லாஹ்! எங்கள் அனைவருக்கும் அமைதியான உள்ளத்தை தருவாயாக!! அளவற்ற நற்கூலியை தருவாயாக!!! இரக்கமுள்ள நாயனே!! அடியார்களுக்கு நன்மை தருபவனே!! எங்களுக்கு நற்பாக்கியங்களை வழங்குவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! நமது உள்ளங்களை மிகவும் அமைதியாக வைத்திருக்க வேண்டும். உள்ளம் அமைதி பெற்று, தூய்மையாக இருக்கும்போது அதன் விளைவால் மற்ற நடவடிக்கைகள் சீராகும். நற்செயல்களை தொடர்ந்து செய்ய முடியும். அமைதியான உள்ளம் அமையப்பெற்றவருக்கு இவ்வுலகில் மிகவும் ஆரோக்கியமான, நிம்மதியான வாழ்வு அமையும். எந்த வித பதற்றமோ, பரபரப்போ இருக்காது, வாழ்வை திருப்திகரமாக அமைத்துக் கொள்ள முடியும். தனக்கு விருப்பமானதையே மற்றவர்களுக்கும் விரும்பும் பரந்த மனப்பான்மை வளரும். மற்றவர்களின் நலனிற்காக துஆச் செய்ய தோன்றும். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (59:10)

وَالَّذِينَ جَاءُوا مِنْ بَعْدِهِمْ يَقُولُونَ رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِإِخْوَانِنَا الَّذِينَ سَبَقُونَا بِالإِيمَانِ وَلاَ تَجْعَلْ فِي قُلُوبِنَا غِلاًّ لِلَّذِينَ آمَنُوا رَبَّنَا إِنَّكَ رَؤُوفٌ رَحِيمٌ

“எவர்கள் இவர்களுக்குப் பின் வந்தார்களோ, அவர்கள் "எங்கள் இறைவனே! எங்களையும் நீ மன்னித்தருள்! எங்களுக்கு முன் நம்பிக்கைக் கொண்ட எங்களுடைய சகோதரர்களையும்



www.sunnathwaljamath.com

மன்னித்தருள்! நம்பிக்கைக் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய உள்ளங்களில் குரோதங்களை உண்டு பண்ணாதே! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிகக் கிருபையுடையவனும், இரக்க முடையவனுமாக இருக்கின்றாய்!" என்று பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர்"

அவர்களுக்கு அளவில்லாத கூலி கிடைக்கும். முன்னோர்களின் தன்மைகளைப் பற்றி ஓர் இறைநேசர் தமது மாணவர்களிடம் கூறிக் காட்டினார்கள். "நமது முன்னோர்கள் மிக எளிமையாகவே பணி செய்வார்கள். ஆனாலும் அவர்களுக்கு அதிகமான பலன்கள் கிடைத்தன" என்று சொன்னார்கள். அப்போது அங்கிருந்தவர்கள், "எதனால் அப்படி?" என்று கேட்டார்கள். "தங்கள் உள்ளங்களை எப்போதும் அமைதியாக வைத்திருந்தார்கள்" என்று விளக்கம் தந்தார்கள். ((600/2) : الزهد لهناد بن السري)

எனவே நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே மறு சீராய்வு செய்ய வேண்டும். நமது மனதின் நிலை என்ன? இவ்வளவு வசதி வாய்ப்புகள் பெற்ற போதிலும் ஏன் திருப்தி கொள்ளாமல் மனம் அலைமோதிக் கொண்டே இருக்கிறது? என்பதையெல்லாம் சிந்தித்து பார்க்க வேண்டும். இதற்கான உதவியை அல்லாஹ்விடம் மனமுருகி கேட்க வேண்டும். அவனுக்கு முழுமையாக கீழ்படிந்து நடப்பதில் பேரானந்தம் இருக்கிறது. யார் மீதும் பொறாமையோ காழ்புணர்ச்சியோ கொள்ளக் கூடாது.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும்

ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹூ அன்ஹூம் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com